## Aravind Eye Hospital - Free Section
## IOL Discharge Summary

| Direct | VAP | Camp Place : |
|---|---|---|

OP No.______________ IP No.__________ R.No. :________

Name : ____________________ Age :______Sex : M / F

Address : ________________________________________

________________________________________

DOA :_____________ DOS :__________ DOD :________

Eye to be operated

| RE | LE |
|---|---|

| One Eyed | Normal | Lacrimal ducts | | Others : |
|---|---|---|---|---|
| | | NF | PF | |

Systematic Diseases

| DM | HT | AST | Cardiac | Allergic to : |
|---|---|---|---|---|

**Nature of Surgery :** ECCE with PI + ACIOL / PCIOL
Secondary ACIOL / PCIOL

**Any Complication :** PC rent, zonules dialysis
Any others

Vision with PH : RE________ LE __________

கண்புரை அறுவை சிகிச்சைக்குப் பின் கவனிக்க வேண்டியவை

1. வீட்டிற்கு சென்றவுடன் கண்கட்டை கழற்றிவிட்டு பகலில் கருப்பு கண்ணாடியை உபயோகிக்கவும் அல்லது கொடுக்கப்பட்டுள்ள பச்சைத்திரையை முழுநேரமும் அணிய வேண்டும். ஒரு வாரத்திற்கு 3 முறை வரை திரையை துவைத்து உபயோகிக்கவும்.

2. வீட்டிற்கு சென்றபின் தினமும் கழுத்திற்கு கீழ் குளிக்கலாம். 30 தினங்கள் கழிந்தபின் ஷாம்பு உபயோகித்து தலைக்கு குளிக்கலாம்.

3. தினமும் காலையில் சுடுநீரில் சுத்தமான பஞ்சு அல்லது துணியை நனைத்து கண்ணை நன்றாக துடைக்க வேண்டும்.

4. கண்ணுக்கு சொட்டு மருந்து போடும்போது இருகைகளையும் சுத்தமாக சோப்பு போட்டு கழுவிவிட்டு அறுவை சிகிச்சை செய்த கண்ணிற்கு மட்டும் போட வேண்டும்.

5. உபயோகப்படுத்தும் மருந்து பாட்டிலின் நுனிப்பகுதியை நன்றாக மூடி சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருக்க வேண்டும்.

6. வழக்கமான உணவு உட்கொள்ளலாம். பத்தியம் கிடையாது.

7. இரத்தக்கொதிப்பு, சர்க்கரை வியாதி போன்ற உடல் சம்பந்தமான வியாதிகள் உள்ளவர்கள் தகுந்த மருத்துவரின் ஆலோசனைப்படி மருந்துகளை உட்கொள்ளலாம்.

8. 30 தினங்களுக்கு வெயில், புகை, மழை, தூசி உள்ள இடங்களுக்கு செல்வதை தவிர்க்கவும்.

9. 30 தினங்களுக்கு குழந்தைகள் மற்றும் கனமான பொருட்களை தூக்கக்கூடாது.

10. 30 நாட்கள் வரை கடைகளில் சென்று முகச்சவரம் செய்வதை தவிர்க்கவும்.

முக்கியக்குறிப்புகள்

1. கண்ணில் புரை அறுவை சிகிச்சை செய்து லென்ஸ் பொருத்தியவர்களுக்கு தையல் பிரிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் அறுவை சிகிச்சை செய்து மூன்று மாதங்களுக்கு பின்னரும் கண்களில் உறுத்தல் இருந்தாலோ, அல்லது தையல் இருப்பதனால் பார்வை மாற்றம் இருந்தாலோ மருத்துவரின் ஆலோசனைக்குப்பின் தையல் பிரித்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

2. கண்ணில் வலி, சிகப்பு, பார்வை குறைவு ஏற்பட்டால் சொந்த வைத்தியங்கள் செய்யாமல் உடனே கண் மருத்துவரை அணுகவும், அல்லது எமது அரவிந்த் கண் மருத்துவ மனைக்கு ஞாயிறு தவிர மற்ற தினங்களில் வரவும்.

3. வீட்டிற்கு சென்ற 40 தினங்களுக்குப் பின் கண்டிப்பாக மறு பரிசோதனைக்கு வரவேண்டும். கண்ணில் புரை அறுவை சிகிச்சை செய்து கொண்ட அனைத்து நோயாளிகளும் இந்த அட்டையில் குறிப்பிட்டுள்ள தேதியில் கண்டிப்பாக மறுபரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

4. கண்ணில் லென்ஸ் பொருத்தி அறுவை சிகிச்சை செய்துள்ளவர்களுக்கு கண்டிப்பாக நல்ல பார்வை கிடைக்கும். ஆனால் ஒரு சிலருக்கு அறுவை சிகிச்சை செய்து ஒரு வருடத்திற்குப்பின் கண்ணில் பொருத்தப் பட்டுள்ள லென்ஸை மறைத்து ஜவ்வு வளர்ந்து மீண்டும் பார்வைக்குறைவு ஏற்படலாம். இது போன்ற நோயாளிகள் உடனே மருத்துவமனைக்கு வந்தால் கட்டணம் ஏதுமின்றி ஒரு சிறு லேசர் சிகிச்சையின் மூலம் மீண்டும் நல்ல பார்வையை பெற்றுச் செல்லலாம்.

# மருந்து போடும் முறை

1. சிவப்பு கலர் .............................................. மருந்து உள்ளவரை தினமும் காலை மட்டும் 2 சொட்டு போடவும்.

2. மஞ்சள் கலர் .................................. மருந்து தீரும் வரையிலும் தினமும் 3 வேளை போடவும்.

3. பச்சை கலர் ............................ மருந்தை 40 நாட்கள் வரை

   முதல் 10 தினங்களுக்கு 4 வேளை

   அடுத்த 10 தினங்களுக்கு 3 வேளை

   அடுத்த 10 தினங்களுக்கு 2 வேளை

   அடுத்த 10 தினங்களுக்கு 1 வேளை

   அடுத்த 10 தினங்கள் வலி இருந்தால் மட்டும் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு ஒருமுறை உபயோகிக்க வேண்டும்.

4. 50 நாட்களுக்குப் பின் இந்த மருந்தை தொடந்து போட்டால் தீமைகள் வரலாம். எனவே தொடர்ந்து போடக் கூடாது.


**Aravind Eye Hospital**

**& Postgraduate Institute of Ophthalomology**

**1, Anna Nagar, Madurai - 625 020.**

**Ph : 2532653 - 57**


ஞாயிறு விடுமுறை